2003 மார்ச் 31]

எடுக்கப்படுகிறவர்களை நியமிக்கலாம், அதிலே பொதுவாக யார் வேண்டுமானாலும் வந்து பங்கேற்கலாம் என்று மரபை மாற்றி அமைத்துவிட்டார்கள். ஆகவே, மீண்டும் ஆதிதிராவிடர் நலத் தொடக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளில் ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களைக்கொண்டு பணி நியமனம் செய்யப்படுகிற வகையிலே அந்தத் திருத்தம் மாற்றியமைக்கப்படுமா என அமைச்சரிடமிருந்து தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் பணியிடங்கள் தற்போது ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம்தான் நிரப்பப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், இருக்கையில் இல்லை.

வினா எண் 150, திரு. கே.கே. உமாதேவன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

150—

சொகுசுப் பேருந்து

***9680—திரு. கே.கே. உமாதேவன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூரிலிருந்து சிங்கம்புணரி வழியாக சென்னைக்கு சொகுசுப் பேருந்து இயக்க தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் திருப்பத்தூரிலிருந்து சென்னைக்கு சிங்கம்புனரி வழியாக சொகுசுப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.கே. உமாதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களை

வணங்குகிறேன், திருப்பத்தூர் ஒரு பேரூராட்சியாகும். சிங்கம்புனரியும் ஒரு பேரூராட்சியாகும். தமிழ்நாடு அரசு விரைவுப் பேருந்துகள் இயக்க வழி இல்லையென்றால், அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பிலாவது திருப்பத்தூரிலிருந்து இயக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சிங்கம்புனரியிலிருந்து சென்னை நகருக்குத் தடம் எண் 141-ன் மூலமாக 21-9-2001 முதல் சொகுசுப் பேருந்து ஒன்று இயக்கப்பட்டு வருகிறது. அதேபோல் தடம் எண் 138-ன் மூலமாக, திருப்பத்தூரிலிருந்து புதுக்கோட்டை, திருச்சி வழியாக சென்னைக்கு இரண்டு பேருந்துகள்—இரண்டு நடைகள்— இயக்கப்படுகின்றன. ஆகவே, சிங்கம்புனரி பகுதி மக்களும் திருப்பத்தூர் மக்களும் பெரிதும் பலன் அடைகின்ற வகையிலே ஏற்கெனவே பேருந்து வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் இந்தத் தடம் எண் 141 - சிங்கம்புனரியிலிருந்து சென்னைக்கு வருகிற அந்தப் பேருந்தில், சொகுசுப் பேருந்தில், போதிய அளவில்—இப்போது ஓடிக்கொண்டிருக்கின்ற பேருந்திலேயே போதிய அளவிற்கு—பயணிகள் அடர்வு இல்லை. இந்த நிலையில் மேலும் கூடுதலாக ஒரு பேருந்து இயக்குவதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 151, மாண்புமிகு திரு. அ. அருணாசலம், பேரவைத் துணைத் தலைவர், மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

151—

துணை மின் நிலையங்கள்

***7752—மாண்புமிகு திரு. அ. அருணாசலம்,** *(பேரவைத் துணைத் தலைவர்):*

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS